தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 20/2021 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.ரமணா | | | |
| **Date** | **:** | **01.08.2025** | | | |
| **Time** | **:** | **11.23 a.m to 11.50 a.m** | | | |

நி.த.சா.**1.**திரு.ரமணா என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை படித்து பார்த்த பின்னர் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். நி.சா.ஆ.4 முன்னிலைக்கு மனுதாரர் 03.07.2019 தேதியிட்ட ராஜினாமா கடிதம் வழங்கினார் என்றால் ஆமாம். அன்றைய தினம் கொடுக்கப்பட்ட ராஜினாமா கடிதத்தை நிர்வாகம் ஏற்காமல் மனுதாரர் வேலையை தொடர வேண்டும் என கேட்டுக்கொண்டது என்றாலும் அதன்படி மனுதாரர் வேலையை தொடர்ந்து செய்து வந்தார் என்றாலும் சரியல்ல. 12.08.2019 தேதி வரையில் மனுதாரரின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல நோட்டீஸ் காலம் வரை வேலையை தொடர மனுதாரர் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். நோட்டீஸ் காலம் வரை வேலை தொடர கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அவரின் பணி நியமன ஆணையிலேயே அதற்கான நிபந்தனைகள் உள்ளது. 12.08.2019

அன்று மனுதாரர் சங்கத்தை சேர்ந்தவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் இல்லை. வேலை நிறுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னர் தான் நி.சா.ஆ.5, 14.08.2019 முன்னிலைக்கு மனுதாரரின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் தவறு நோட்டீஸ் காலம் முடிந்த பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எங்கள் நிறுவனத்திற்கு சான்றிட்ட நிலையாணை உள்ளது என்றால் ஆமாம். மனுதாரர் தொழிற்சங்கம் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்த காரணத்தினால் தான் நிர்வாகம் மனுதாரரின் ராஜினாமாவை ஏற்பதாக தெரிவித்தது என்றால் சரியல்ல. நி.சா.ஆ.1 நிலையாணை பிரிவு 28ல் ராஜினாமா பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பிரிவு 28A முன்னிலைக்கு ராஜினாமா ஏற்கப்படுவதற்கு நோட்டீஸ் காலம் ஒரு மாதம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 03.07.2019 அன்று மனுதாரர் கொடுத்த ராஜினாமா கடிதம் மீது 02.08.2019 ஒரு மாத காலம் முடியும் வரை நிர்வாகம் எந்த முடிவும் எடுத்தது என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மனுதாரரின் ராஜினாமா கடிதத்தை ஒரு மாத நோட்டீஸ் காலத்திற்கு உள்ளாக நிர்வாகம் ஏற்றுக்கொண்டு முடிவு எதுவும் எடுக்காத காரணத்தினால் அந்த ராஜினாமா கடிதம் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. 12.08.2019 அன்று தொழிற்சங்கம் வேலைநிறுத்த அறிவிப்பு கொடுத்ததன் காரணமாக ஆத்திரம் உற்ற நிர்வாகம் பழிவாங்கும் நோக்கத்தோடு மனுதாரரின் ராஜினாமா கடிதத்தை 41 நாட்கள் கழித்து ஏற்றுக்கொள்ளபடுவதாக தெரிவித்து 14.8.2019

அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றால் தவறு. நி.சா.ஆ 4 முன்னிலைக்கு 3.7.2019 அன்று கொடுத்த ராஜினாமா கடிதத்தை நிர்வாகம் 2.8.2019 வரை ஏற்காமல் நிராகரிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் ராஜினாமா கடிதம் கொடுத்து அதன் பின்னரும் ஒரு மாதம் தொடர்ந்து பணி செய்து வந்திருக்கும் நிலையில் ராஜினாமா கடிதம் ஆனது 02.08.2019 அன்று முடிவுக்கு வந்துவிட்டது என்றாலும் நிர்வாகத்தின் வசதிக்காக பழிவாங்கும் நடவடிக்கையாக 14.08.2019 அன்று நி.சா.ஆ.5 முன்னிலைக்கு ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சொல்வது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் வேலையை ராஜினாமா செய்து விட்டார் என்பதுதான் நிர்வாகத்தின் நிலைப்பாடு என்றால் ஆமாம். மனுதாரர் மீது வேறு எந்த குற்றச்சாட்டும் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். மனுதாரரின் சேவை நிர்வாகத்திற்கு தேவை இல்லை அவர் ஒழுங்கினமானவர் தகுதி இல்லாதவர் என்ற நிலைப்பாடு நிர்வாகத்தால் எடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். மனுதாரர் ராஜினாமா கடிதம் கொடுத்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அதாவது 02.08.2019 முன்பு நிர்வாகம் அவருக்கு செட்டில்மெண்ட் ஏதும் வழங்கவில்லை என்றால் ஆமாம். 12.08.2019 தேதியிட்ட சட்டபூர்வ வேலை நிறுத்த அறிவிப்பு கடிதம் கொடுத்த பின்னர் 26.08.2019 முதல் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது என்றால் ஆமாம். ஆனால் அதற்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை. 10.08.2019 அன்று ஊதிய உயர்வு சம்பந்தப்பட்ட தொழிற் தகராறு தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்யப்பட்டது

என்றால் இல்லை. 01.01.2019 முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 18,000/- ஊதியம் உயர்த்தி வழங்க வேண்டும் என தொழிற் தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம் ஆனால் அதன் பேரில் மேல்முறையீடு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 01.01.2024 முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 8,000/- ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். ஆனால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. 12.08.2019 தேதியிட்ட சட்டபூர்வ வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்து 26.08.2019 முதல் வேலை நிறுத்தம் செய்து வந்த தொழிலாளர்கள் 51 பேரையும் விசாரணை என்று நிர்வாகம் வேலைநீக்கம் செய்து விட்டது என்றால் இல்லை. வேலை நிறுத்தத்திற்கு சமரச துணை ஆணையர், தொழிலாளர் துறை அவர்களால் அப்ரூவல் மறுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த தொழிலாளர்களுக்கு உயர் நீதிமன்ற உத்தரவுப்படி சட்டப்பிரிவு 17B ன்படி சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது என்றால் இல்லை. மனுதாரரும் 51 தொழிலாளர்களும் தொழிற்சங்கம் மூலம் ஊதிய உயர்வு குறித்து கேள்வி கேட்ட காரணத்தினால் பழிவாங்கும் நடவடிக்கையாக சட்டவிரோதமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் தவறு. மனுதாரரின் வேலை நீக்கம் பழிவாங்கும் நடவடிக்கை மற்றும் தொழிலாளர் விரோத போக்கு வகையின் கீழ் வரும் காரணத்தினால் அவர்களின் வேலைநீக்கம் சட்டவிரோதமானது என்றால் இல்லை. நி.சா.ஆ.7 ஆவணத்தில் மனுதாரரின் கையொப்பம் இல்லை என்றால் ஆமாம். போனஸ் சம்பள பாக்கி விடுப்பு சம்பளம் ஆகியவற்றை மட்டுமே வழங்கியது என்றாலும் முழு மற்றும் இறுதி

செட்டில்மெண்ட் தொகை எதுவும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல முழு மற்றும் இறுதி செட்டில்மெண்ட் தொகை கொடுத்ததற்கான ஆதாரம் தான் நி.சா.ஆ.7 ஆகும். மனுதாரர் வேறு இடத்தில் ஆதாய வேலையில் இருப்பதாக பதில் உரையிலும் பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றால் ஆமாம். மனுதாரரை மீண்டும் வேலையில் எடுக்க தயாராக இருக்கிறோமா என்றால் இல்லை. அவர் வேலையை ராஜினாமா செய்து விட்ட காரணத்தினால் அவ்வாறு மீண்டும் வேலைக்கு எடுக்க இயலாது. மனுதாரரின் ராஜினாமா கடிதம் ஒரு மாத காலத்திற்குள் ஏற்கப்படாத நிலையில் மனுதாரரும் ராஜினாமா கடிதம் கொடுத்த பின்னரும் பணியை தொடர்ந்து வந்த காரணத்தினால் 02.08.2019 க்கு பின்னர் மனுதாரரின் ராஜினாமா கடிதம் ஏற்கப்படுவதற்கு நிர்வாகத்திற்கு உரிமை இல்லை என்றால் தவறு. மனுதாரர் வேலை பார்த்து வந்த இடத்தில் வேறு ஒரு நபரை பணி அமர்த்தி விட்டதாக பதிலுரையிலோ சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் ஆமாம். அவரின் இடத்திற்கு வேறு நபர் யாரும் தேவைப்படாத காரணத்தினால் அது சம்பந்தமாக சொல்லவில்லை.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.08.02 17:37:30 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:01.08.2025.